நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சாதாரணக்கூட்டம் 27/11/2020 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு

**பொருள் எண். 1 / பணி எண்.1**

2019-2020ம் ஆண்டு பொது நிதி கீழ் தேவாலா போக்கர் காலனியில் சிமெண்ட் நடைபாதை அமைத்தல். ரூ.9.00 இலட்சத்திற்கு 18.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.நசுருதீன் | 0.05 % குறைவு |
| 2 | திரு. சுகைப் | 0.28% அதிகம் |

**அலுவலக குறிப்**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. நசுருதீன் என்பவர் 0.05 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண். 2 / பணி எண்.1**

2019-2020ம் ஆண்டு பொது நிதி கீழ் நாடுகாணியில் கல்வெர்ட்டு அமைத்தல். ரூ.9.50 இலட்சத்திற்கு 18.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. காசிலிங்கம் | 0.08% குறைவு |
| 2 | திரு. நசுருதீன் | 0.36% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. காசிலிங்கம் என்பவர் 0.08 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்கு ஆணையரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் TN43X2905 எண் கொண்ட பொளிரோ வாகனத்திற்கு டயர்கள் தேய்வடைந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.34000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகரரட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 01/10/2020 முதல் 30/11/2020 முடிய இரண்டு மாதங்களுக்கு திருமதி.M.கமருன்னிசா, M.R.காய்கறி வியாபாரம் பந்தலூர் அவர்களிடம் இருந்து காய்கறிகள் வாங்கப்பட்டு வந்தது. கடந்த 01/07/2020 முதல் 30/09/2020 முடிய மூன்று மாதங்களுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போா அவசர, அவசியம் கருதி அக்டோபர் 2020 முதல் நவம்பர் 2020 முடிய மேலும் இரண்டு மாதங்களுக்கு காய்கறிகள் வழங்க மேற்படியாருக்கு அனுமதி வழங்கவும், அன்னாருக்கு மேற்கண்ட இரு மாதங்களுக்கு அதற்கான தொகையை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.5</u>**

அம்மா உணவகத்திற்கான காய்கறிகளை விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விநியோகஸ்தரர்களிடம் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளரின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/ முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | MAR காய்கறி வியாபாரம் பந்தலூர் அவர்களின் விலைப்புள்ளி | ரூ.1448.00 |
| 2 | M.M காய்கறி வியாபாரம் பந்தலூர் அவர்களின் விலைப்புள்ளி | ரூ.750.00 |
| 3 | மினி காய்கறி வியாபாரம் பந்தலூர் அவர்களின் விலைப்புள்ளி | ரூ.732.00 |
| 4 | G.V காய்கறி வியாபாரம் பந்தலூர் அட்டி அவர்களின் விலைப்புள்ளி | ரூ.1578.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேற்கண்டவாறு உள்ள விநியோகம் செய்பவர்களில் மினி காய்கறி வியாபாரம் பந்தலூர் அவர்களின் தினசரி குறிப்பிட்டுள்ள ரூ.732.00—க்கு வழங்கப்பட்டுள்ள விலைப்புள்ளியை 01/12/2020 முதல் ஏற்று கொள்ளவும், பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்.6</u>**

நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், உதகமண்டலம் அவர்களின் கடிதத்தின்படி இந்நகராட்சிக்கு உட்பட்ட பந்தலூர் பஜார் பேருந்து நிலைய வளாகத்தில் 15x10=150 சதுர அடியில் மாத வாடகை அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க இடம் கோரியுள்ளார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், உதகமண்டலம் அவர்களின் 18/09/2020 ஆம் நாளிட்ட கடிதம் இவ.15489/2020/ஆர்2 மேற்படி இடத்தில் கட்டிடம் இருந்தால் மட்டுமே வாடகை நிர்ணயம் செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளார். எனவே இந்நகராட்சி பேருந்து நிலையமானது சர்வே எண்.2354/11—ல் வழிகாட்டு மதிப்பீடு ரூ.167/— அதன் அடிப்படையில் வாடகை மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ.251.00 (கணக்கீட்டுத்தாளின்படி) நிர்ணயம் செய்து அதற்குரிய வைப்புத்தொகையுடன் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.7</u>**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN43Y8897 வாகனத்தின் மின்கலன் பழுது ஏற்பட்டுள்ளதை புதியதாக பெறுவதற்கும் மற்றும் வாகனத்தின் ஹெட் பழுது நீக்கம் செய்யவோ அல்லது பழுது நீக்கத்தின் பொழுது புதிய ஹெட் பெறுவதற்கும் 12/11/2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Lakshmi Auto Garrage, Pandalur | 21050/— |
| 2 | M/s.SRK Auto Garrage, Gudalur | 22550/— |
| 3 | M/s.Friends Auto Garrage, Pandalur | 22000/— |

**<u>அலுவலக குறிப்பு</u>**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Lakshmi Auto Garrage, Pandalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 8

நெல்லியாளம் நகராட்சியில் பொதுநிதியில் நிதி இல்லாத காரணத்தால் பட்டியலில் குறிப்பிட்டுள்ள 15 பணிகள் ரத்து செய்யும் பொருட்டு தனி அலுவலரின் கூட்டத்தில் பொருள் வைக்க ஆணையரின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | பொன்னூர் காலணி சிமெண்ட் நடைபாதை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 5.00 |
| 2 | அத்திக்குன்னா சிமெண்ட் சாலை அமைத்தல். | 5.00 |
| 3 | சேலக்குன்னா மணி வீடு அருகில் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 5.00 |
| 4 | பூதானக்குன்னு பன்னீர் பெட்டி கடை அருகில் இண்டர்லாக் சாலை மற்றும் பக்க சுவர் அமைத்தல் | 9.20 |
| 5 | இரும்புபாலம் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 5.00 |
| 6 | நாடுகாணி தபால் நிலையம் அருகில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 5.00 |
| 7 | செட்டிவயல் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 10.00 |
| 8 | பந்தலூர் பஜார் கால்வாய் அமைத்தல் | 4.00 |
| 9 | அண்ணாநகர் குடிநீர் குழாய் அமைத்தல் | 5.00 |
| 10 | இன்கோ நகரில் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 5.00 |
| 11 | ரிச்மெண்ட் மயானம் அருகில் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 10.00 |
| 12 | பந்தலூர் அண்ணாநகர் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 10.00 |
| 13 | இரும்புபாலம் சிமெண்ட் சாலை மற்றும் கல்வெர்ட்அமைத்தல். | 5.00 |
| 14 | தேவாலா RDI சாலை கால்வாய் அமைத்தல் | 10.00 |
| 15 | ஏலமன்னா தடுப்பு சுவர் மற்றம் கல்வெர்ட் அமைத்தல் | 9.30 |

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்

பொருள் எண்.9

நெல்லியாளம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மழை காலத்தில் அதிக அளவில் மழை பெய்யும் பொழுது மழை நீர் மேற்பகுதியில் புகுந்து அலுவலகத்தின் கீழ் பகுதியில் நீர் கசிவு ஏற்பட்டு வருகிறது.இதனை நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வின் பொழுது உடனடியாக சரிசெய்ய அறிவுறுத்தியுள்ளதால் மேற்கண்ட அலுவலக கட்டிடத்தில் பொறியியல் பிரிவு அறை அமைக்க வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட பணிக்கு ரூ.9.00 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு காலங்கடந்த வைப்பு தொகை திரும்ப வழங்கியதற்க்கு மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | செய்தலவி | 47475 /- |
| 2 | ஷாஜி | 12500 /- |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சிக்கட்பட்ட பால்டே, நாடுகாணி, பொன்னூர், கீழ்நாடுகாணி,காட்டிமட்டம், சோலைமலை, இந்திராநகர், பந்தலூர்அட்டி, பூதானக்குன்னு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள திரவ குளோரினேசன் நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் சரிவர இயங்காமலும்,உதிரிபாகங்கள் உடைந்தும் காணப்படுவதால் பொதுமக்களுக்கு குளோரினேசன் செய்யப்பட்ட குடிநீர் வழங்குவதில் தடை ஏற்படுகிறது. எனவே குளோரினேசன் நிலையத்தை பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சிக்கட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குளோரினேசன் செய்யப்பட்ட குடிநீர் வழங்குவதற்க்கு பால்டே, நாடுகாணி, பொன்னூர், கீழ்நாடுகாணி,காட்டிமட்டம், சோலைமலை, இந்திராநகர், பந்தலூர்அட்டி, பூதானக்குன்னு ஆகிய பகுதிகளில் திரவ குளோரினேசன் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.அப்பகுதியில் குளோரின் அளவு முடிந்தவுடன் மீண்டும் குளோரின் வாங்கி நிரப்ப வேண்டியுள்ளது. எனவே குளோரினேசன் ஆண்டு முழுவதும் சுகாதாரமாக செய்யப்பட்டு சுத்தகரிக்கப்பட்டு குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே குளோரினேசன் வாங்குவதற்க்கு ரூ.9.90 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட கீழ்கண்ட இடங்களில் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

இலட்சம்

| | | |
|---|---|---|
| 1 | சேலக்குன்னா ST காலணியில் தடுப்பு சுவர் அமைத்தல் | ரூ.5.00 |
| 2 | கைதக்கொல்லியில் இன்டர்லாக் சாலை அமைத்தல் | ரூ.7.00 |
| 3 | மாமுண்டி காலணியில் சோலார் விளக்கு அமைத்தல் | ரூ.8.60 |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட பல்வேறு பகுதிகளில் வறட்சியின் காரணமாக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க பற்றாகுறையாக உள்ளதால் டேங்கர் லாரியின் மூலம் வழங்க அவசியம் ஏற்படுகிறது.பொதுமக்களின் அவசர அவசியம் கருதி குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ரூ.803410 வழங்கியதற்க்கு மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம் .

**<u>பொருள் எண்.15</u>**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதார பணிகளுக்காக DBC பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர், நீலகிரி அவர்களின் அறிவுறுத்தலின்படியும், பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (Section-15)–ன்படி மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தின்படி திரு.ஜெயநாதன் மூலம் பணியமர்த்தப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.16/ பணி எண்.1</u>**

நெல்லியாளம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகளில் IEC பணிகளை ஒலிபெருக்கி மூலம் மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரி M/s.சிந்து லைட்ஸ் அன்ட் சவுண்ஸ், அத்திகுன்னா மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.16/ பணி எண்.2</u>**

நெல்லியாளம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகளில் IEC பணிகளில் பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரி M/s.ஸ்ரீ கிருஷ்ணா ஆப்செட் அன்ட் பிரிண்டர்ஸ், கூடலூர் மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.17/ பணி எண்.1</u>**

நெல்லியாளம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு பாதுகாப்பு பொருட்கள் விலைப்புள்ளி கோரி M/s.கெம் கெமிக்கல், ஈரோடு மூலம் பெற பணி உத்திரவு வழங்கி பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.17/ பணி எண்.2</u>**

நெல்லியாளம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு பாதுகாப்பு பொருட்கள் விலைப்புள்ளி கோரி M/s.சப்தகிரி அன்ட் கம்பெனி, கோயம்புத்தூர் மூலம் பெற பணி உத்திரவு வழங்கி பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.17/ பணி எண்.3**

நெல்லியாளம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு கிருமி நாசினிகள் விலைப்புள்ளி கோரி M/s.ஸ்ரீ சக்தி ஏஜென்சிஸ், ஈரோடு மூலம் பெற பணி உத்திரவு வழங்கி பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.18**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதார பணிகளுக்காக வெளிக்கொனர்வு மூலம் (Outsourcing) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண்.8611/பி3/2013, நாள்.17/04/2013–ன்படி 50 நபர்களை பணியமர்த்தி பணிசெய்யப்பட்டு வந்தது. மேலும் இந்த அனுமதியினை புதுப்பித்து ஆட்களை பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் 27/11/2020
நெல்லியாளம் நகராட்சி